https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# ஆண்டாளின் உவமை நயம்

**பா. செ. சுடர்விழி**
முனைவர் பட்ட ஆய்வாளர் தமிழ்

**முனைவர் பா. பொன்னுராஜன்**
ஆய்வு நெறியாளர், உதவிப் பேராசிரியர்
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி)
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது, சிவகாசி
ORCID Id: https://orcid.org/0000-0002-3712-1354

**ஆய்வுச் சுருக்கம்**

*இலக்கியங்களில் ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்புமைப்படுத்தி விளக்குவது உவமை. உவமையானது படைப்பாளரின் சூழல், படைப்பின் நோக்கம் இவற்றை மையமாகக் கொண்டு அமையும். இலக்கியத்தை அழகுறச் செய்வதற்கு உவமை பெரிதும் உதவுகின்றது. ஒவ்வுதல் - ஓவியம் - ஒப்புமை என்ற சொற்களோடு இனங்கண்டறியப்பட்டு பேசப்படுவது உவமம் ஆகிறது. ஒரு சொல் முதல் பல அடிகள் வரையிலும் உவமை இடம்பெறுவதுண்டு. பழமொழிகள், வழக்குச்சொற்களிலும் உவமை இடம்பெறும். 'வைக்கப்போருல நாய் படுத்தாற்போல தலைவர் உள்ளார்' என்னும் பழமொழி வழக்கத்தில் காணப்படுகின்றது. 'காற்றுப் போல மிதந்தான், தீ போல பேசினான்' என்பது போன்றும் உவமைகள் இடம்பெறுகின்றன. இறைவனின் மீதுள்ள நம்பிக்கையையும் அன்பினையும் வெளிப்படுத்துவதாக அமைந்தவை பக்தி இலக்கியங்கள். தான் உணர்ந்த இறைவனை பிறரும் உணரவேண்டும் எனும் அடிப்படையில் தேவாரம், நாலாயிரத் திவ்ய பிரபந்தங்கள் இயற்றப்பட்டன. இப்பாடல்களில் தான் உணர்ந்த இறையை உணர்த்த உவமைப் பண்பு பெரும்பான்மையாக கையாளப்படுகின்றது. இதன்வழியில் ஆண்டாளின் உவமை நயத்தை அவரது திருப்பாவைப் பாசுரங்கள் வழி ஆய்ந்தறிவதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைகின்றது. பொருள்களுக்கிடையே அமைகின்ற ஒத்த ஒற்றுமையை அடிப்படையாக வைத்து, அதன் வழியே மற்றொரு பொருளை விளக்கிக் காட்டுவது உவமையாகும். இறைவன் மீதுள்ள அன்பினைத் தனது பாடல்கள் மூலம் வெளிப்படுத்த விரும்புகின்ற ஆண்டாள், உவமையை எங்ஙனம் கையாண்டுள்ளார் என்பதை ஆய்ந்தறிவதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.*

**திறவுச் சொற்கள்**

*உவமை, ஆண்டாள், ஆமாப்போலும், வினை, பயன், மெய், உரு.*

**உவமை – விளக்கம்**

*அறிந்த ஒரு பொருளைக் கொண்டு அறியாத பொருளை விளக்குவது உவமையாகும். இதைப்போன்று இது இருக்கும் என்று கூறுவர். இதனை "ஆப்போலும் ஆமா" (தொல். பொருள். ப.375) என இளம்பூரணர் கூறுவார். ஆமா என்பது காட்டுப்பசு; காட்டுப் பசு*

எவ்வாறு இருக்கும் என்றால் பசுவைப் போன்று இருக்கும் எனக் கூறுவது, காட்டுப்பசுவினை அறியாத ஒருவருக்கு அதனை மனக்கண் முன் நிறுத்துவதற்கு இந்த உவமை உதவுகின்றது. சொல்லப் படுகின்ற பொருள் அறிந்ததாகவே இருந்தாலும் அதற்கு சுவையூட்டியாக உவமை செயல்படுகின்றது. "தானறிந்து சொல்ல விரும்புகிற பொருளை மேலும் தெளிவுபடுத்துவதற்கும்-கற்பனைத் திறனோடு அதனைக் காட்டுவதற்கும் உவமம் பயன் படுகிறது" என்கிறார் தி. சு. நடராசன். (நடராசன், தி. சு., ப.155) பெண்ணைப் பற்றி வர்ணிக்க, மென்மைத் தன்மையுடைய மலர்கள், கொடிகள் இவற்றோடும்; ஆணின் வீரத்தை கூறுவதற்கு சிங்கம், புலி இவற்றோடும் ஒப்புமைப்படுத்தும் மரபு காணப்படுகின்றது.

## உவமை இலக்கணம்

முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பி யத்தில், உவமவியல் என்னும் இயலில் உவமையின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தின் உரையாசிரியராகிய இளம்பூரணர் உவமையைப் பற்றி விளக்குகையில், "புலன் அல்லாதன புலனாத லும் கேட்டார்க்கின்பம் பயத்தலும்" (தொல். பொருள். ப.375) என்று உவமையின் பயன் குறித்துக் கூறியுள்ளார். உவமையானது வினை, பயன், மெய், உரு எனும் நான்கு நிலைகளை முதன்மையாகக் கொண்டு தோன்றுவதாகத் தொல்காப்பியர் கூறுகிறார். இதனை,

**"வினைபயன் மெய்உரு என்ற நான்கே**

**வகைபெற வந்த உவமத் தோற்றம்"**
*(தொல். பொருள். 272)*

என்னும் நூற்பா வாயிலாகத் தெளிந்து கொள்ள முடிகின்றது.

உவமை கூறுகையில் ஒப்புமையாக வரும் பொருள் உயர்ந்த தன்மையுடையதாக இருத்தல் வேண்டும். வலிமையைப் பற்றி கூறுகையில், சிங்கம் போல் வலிமையுடை யவன் என்பதில், வலிமையுடையவற்றில் சிறப்பு உயர்வுடையதாக சிங்கம் கருதப் படுகிறது. இங்கு வலிமையுடைய வீரன் சிங்கத்தை ஒத்தவன் என்னும் பொருள்பட அமைந்துள்ளது. இதனை,

**"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை"**
*(தொல். பொருள், 274)*

என்னும் நூற்பாவின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. அணிகளுள் தாயணி உவமை யணி. ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடையேயான ஒப்புமையைக் கூறுவது உவமை. பல பொருள்களுக்கு இடையேயான ஒப்புமையையும் விளக்குகி ன்றது. மேலும் பொருள்களுக்கு இடையே யான பண்பு, தொழில், பயன் இவற்றின் அடிப்படையில் உவமை அமைகின்றது எனத் தண்டியலங்காரம் இலக்கணம் வகுக்கிறது. இதனை,

**"பண்பும் தொழிலும் பயனும் என்றிவற்றின்**

**ஒன்றும் பலவும்பொருளொடு பொருள் புணர்ந்து**

**ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை."**
*(தண்டி, நூற்பா. 30)*

என்ற நூற்பாவின் வழி அறிய முடிகின்றது.

## தொல்காப்பியர் காட்டும் உவமை வகைகள்

தொல்காப்பியர் உவமையானது வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கின் வழி பிறக்கிறது என்கிறார். இதனடிப்படையில் உவமையானது, வினை உவமை, பயன் உவமை, மெய் உவமை, உரு உவமை என்று நான்கு வகைகளில் பிரிக்கப்படுகின்றது.

### வினை உவமை

வினை என்பது செய்யப்படும் செயலைத், தொழிலைக் குறிப்பதாகும். நீட்டல், விரித்தல், குவித்தல், நடத்தல் போன்ற செயல்களைக் குறிக்கின்றது. ஒரு செயலை மற்றொரு செயலொடு ஒப்பிட்டுக் கூறுவது வினை உவமை ஆகும்.

**"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**

**விழிப்பது போலும் பிறப்பு"** *(குறள்: 339)*

என்னும் குறள் வழி வினை உவமத்தை அறியமுடிகின்றது. திருப்பாவையில் மழை பெய்யும் பொழுது, மின்னலானது திருமாலின் ஒரு கையில் உள்ள சக்கரம் போல் மின்னும் தன்மை பெற்றும்; இடி இடிப்பது, மற்றொரு கையில் உள்ள வலம்புரிச் சங்கு எழுப்பும் ஒலியைப் போன்று அதிர்ந்தும்; மழைத்துளி கள் பார்ப்பதற்கு, திருமாலின் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல விழுவது போன்றும் இருக்கிறது என்று காட்டியு ள்ளார்.

**“ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து**

**தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்**

**வாழ உலகினில் பெய்திடாய்”**

(திருப்பாவை, 4)

என்னும் பாடலடிகள் மூலம் மழை உருவாகின்ற செயலுக்கு திருமாலின் கையில் உள்ள சங்கு, அம்பு போன்றவை ஒப்புமைப் படுத்தப் பட்டுள்ள விதத்தினை அறிய முடிகின்றது. அதிகாலையில் இறைவன் கண்விழிக்கும் பொழுதே காண்பதற்காக, இவ்வுலக மன்னர்கள் யாவரும் உன் அரியணையின் கீழ் கூடி நிற்கின்றனர். அவர்களைப் போலவே நாங்களும் உன் இல்லம் தேடி வந்து முன் நிற்கின்றோம் எனக் கூறுகின்றார். மேலும் தாமரைப்பூவின் மொட்டு சிறிதுசிறிதாக விரிவது போன்று உனது கண் இமைகளை விழித்து எங்களைப் பார்க்க மாட்டாயா? என்று கேட்கின்றார். இதனை,

**“அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான**

**பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே**

**சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்**

**கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போல**

**செங்கண் சிறிச்சிறிதே எம்மேல் விழியாவோ?”** (திருப்பாவை, 22)

என்னும் பாடல்வழி அறிய முடிகின்றது. இதில் திருமால் தூக்கத்திலிருந்து கண் விழிப்பது சலங்கைகளின் முத்துக்கள் சிறிதாக திறந்திருப்பது போன்று மெதுவாக விழித்து எங்களைக் காணவேண்டும் என்று வினை உவமை பயின்று வந்துள்ளமையை அறிய முடிகின்றது.

## மெய் உவமை

மெய் என்பது ஒரு பொருளின் வடிவத்தைக் குறிக்கின்றது. பொருளின் தன்மையை விவரிக்க அதன் வடிவம் அல்லது நிறத்தை முதலில் சுட்டிக் காட்டுவர். நிலா போலும் முகம், வில் போன்ற நெற்றி என ஒரு பொருளை தெளிவுபடுத்த அதேபோன்று காணப்படக்கூடிய பிறிதொரு பொருளின் வடிவத்தை ஒப்பிட்டுக் காட்டுவது மெய் உவமை ஆகின்றது. இறைவனின் உருவத்தை அனைவரும் அறியச் செய்வதற்கும் மெய்உவமை பயன்படுகின்றது. பரிபாடலில் திருமாலை வர்ணிப்பதை,

**“எரிமலர் சினைஇய கண்ணை; பூவை**

**விரிமலர் புரையும் மேனியை;”**

(பரிபாடல், 1: 6-7)

என்னும் வரிகள் மூலம் அறிய முடிகின்றது.

இவ்வாறே திருப்பாவையில் இறைவனின் உருவத்தைக் கூறும்பொழுது, திருமாலின் முகம் சூரியனையும், நிலவையும் சேர்த்தாற் போன்ற தன்மையை பெற்றுள்ளது. அதாவது சூரியனைப் போல மொழிவும் நிலவைப் போல குளிர்ச்சியையும் பெற்றுள்ளது என்பதை,

**“கதிர்மதியம் போல் முகத்தான்”**

(திருப்பாவை, 1)

என்ற வரியின் மூலம் ஆண்டாள் எடுத்துரைக்கிறார்.

மேலும் இறைவனின் பாதங்கள், தாமரை மலரின் இதழ்களைப் போன்ற மென்மைத் தன்மையுடன் காணப்படுகிறது என்பதை, **“பொற்றா மரையடியே” (திருப்பாவை,29)** என்னும் வரியின் மூலம் எடுத்துரைக்கி ன்றார்.

பெண்களைப் பற்றி வர்ணிக்கையில், ‘துடி போலும் இடை, கயல் போன்ற கண், நிலவன்ன முகம்’ முதலான உவமைகள் கூறப்படுகின்றன. இவ்உவமைக்கு திருப் பாவையில் யசோதை பிராட்டியின் கண்கள், உழவர்கள் பயன்படுத்தும் ஏர் போன்ற வடிவத்தை போன்று காணப்படுகிறது. ஏரின் நுனி கூர்மையாக இருப்பது போன்று யசோதையின் கண்களும் கூர்மையாக நீண்டு காணப்படுகிறது என்கிறார். இதனை,

**“ஏரார்ந்த கண்ணி யசோதை”** (திருப்பாவை,1)

என்னும் பாடல் அடியின்வழி அறிய முடிகின்றது.

நப்பின்னைப் பிராட்டியை வருணிக்கும் பொழுது அவரது உடலானது செப்புக்கலசம் போல திண்மையுடன் விரிந்தும் ஒடுங்கியும் காணப்படுகிறது என்பதை,

**“செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்”** (திருப்பாவை, 20)

*என்ற பாடல் அடியின் மூலம் அறிய முடிகின்றது.*

*பெண்களின் முகமானது,* ***"திங்கள் திருமுகத்துச் சேயிழையார்" (திருப்பாவை,30)*** *என்னும் அடியில் கூறுவது போன்று நிலவோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.*

***உரு உவமை***

*ஒரு பொருளின் தன்மையில் அதன் நிறத்தை கொண்டு காண்பது உரு ஆகும். அறியப் படாத ஒரு பொருளை அறியப்படுத்த அதன் நிறத்தை ஒத்த மற்றொரு பொருளின் நிறத்தைக் கொண்டு தெளிவுபடுத்துவது உரு உவமை எனப்படுகின்றது. பால் போலும் வெண்மை, பயிர் போலும் பச்சை என்று உரு உவமை காணப்படுகிறது. இறைவனின் பாதங்களைக் கூறுகையில், "தாமரை புரையுங் காமர் சேவடி" (குறுந். கடவுள் வாழ்த்து) என்று இறைவனின் பாதங்கள் தாமரைப் பூவின் சிவந்த நிறத்தை ஒத்தது என்று ஒப்பிட்டுக் காட்டுவர்.*

*திருப்பாவையில் இறைவனின் நிறத்தைக் கூறும்போது, ஊழி காலமாகிய பெரும் மழைக்காலத்தில் வருகின்ற மேகத்தின் நிறத்தைப் போன்ற நிறத்தை உடையவன் திருமால் என்று கூறுகின்றார். இதனை,*

***"ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்து"***
*(திருப்பாவை, 4)*

*என்ற திருப்பாவை அடியின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இங்கு ஊழிக்காலமானது கருத்த இருள் காலத்தைப் போன்றது என்பதை 'ஓர் கார் இருள் ஊழி (திருவாய்மொழி, எட்டாம்பத்து, பாடல்:4) என்கிற நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாடலும் சான்று தருகின்றது. இறைவனானவன் காயம்பூவின் நிறமாகிய கருநீல நிறத்தையும் ஒத்தவன் என்பதை,*

***"நீ பூவைப்பூ வண்ணா !"*** *(திருப்பாவை, 23)*

*என்னும் அடியின் வழி அறியமுடிகிறது.*

*இறைவனை மட்டுமின்றி திருமாலின் கையில் இருக்கின்ற சங்கு பற்றி கூறுகையில் அதன் நிறமானது பால் போன்ற வெண்மை நிறத்தை உடையது என்பதை,*

***"பாலன்ன வண்ணத்துஉன் பாஞ்ச***
***சன்னியமே"*** *(திருப்பாவை, 26)*

*என்ற அடியின் மூலம் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.*

***நிறைவுரை***

*செய்யுளிற்கு அழகு சேர்ப்பனவற்றுள் ஒன்று உவமை நயம். ஆண்டாள் இறைவன் மீது காதல் கொண்டு பாடிய பாசுரங்களில் உவமை மேலோங்கப் பெற்றிருப்பதை திருப் பாவையின் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றது. உவமையின் வகைகளாக இலக்கண நூலார் கூறிய நான்கு வகை உவமைகளுள் வினை, மெய், உரு ஆகிய மூன்றும் ஆண்டாளின் திருப்பாவையில் வெளிப்படையாக இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. இறைவனின் புகழைப் பாடக்கூடியதாக அமைந்துள்ளதால், திருமாலின் உடல் அழகு, நிற அழகினை எடுத்துக்கூற மெய், உரு உவமைகள் பெரும் பாலும் இடம்பெறுகின்றன. திருமாலின் செயல்களை எடுத்துக்கூறும் இடங்களில் வினை உவமையை பயன்படுத்தியுள்ளமை சிறப்பு. ஆண்டாளின் உவமை நயம், தொல்காப்பியர் சுட்டிய இலக்கணத்தோடு பொருந்தி அமைந்து ள்ளதை உணர முடிகின்றது.*

***துணை நின்றவை***

1. *அன்பரசு, பா., திருப்பாவை திருவெம்பாவை மூலமும் எளிய தமிழ் உரையும், நர்மதா பதிப்பகம், சென்னை.*
2. *இளம்பூரனார் (உ.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை.*
3. *நடராசன்,தி.சு., தமிழ் அழகியல் மரபும் கோட்பாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.*
4. *புலியூர்க்கேசிகன் (உ.ஆ.), திருக்குறள் புதிய உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.*
5. *முனைவர் சுபாஷ் சந்திரபோஸ், ச (உ. ஆ.), தண்டியலங்காரம், இயல் பதிப்பகம், திருச்சி.*